எழிலுறு காட்சிகளுடன்
அழகுறப்படம் பிடித்திட
விஜயம் செய்யுங்கள்
அஜந்தா
போட்டோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 21 சனிக்கிழமை (04 – 02 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 69

மங்களகரமான நிகழ்ச்சிகளை
திங்களெனத் துலங்கிட
வீடியோ படம்பிடித்திட
அஜந்தா
வீடியோ
63, சங்கிலியன் வீதி,
(முத்திரைச் சந்தையடி)
நல்லூர்.

# கண்காணிப்பு குழுத் தலைவர்கள் நாளை ஹெலி மூலம் வருகின்றனர்

## புலிகளைச் சந்தித்தபின் பணி ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், பெப். 4

மோதல் தவிர்ப்பு உடன்பாட்டைக் கண்காணிக்கும் நான்கு குழுக்களின் தலைவர்களும் கொழும்பில் இருந்து பலாலிக்கு வந்து அங்கிருந்து நாளை காலை ஹெலி மூலம் யாழ்ப்பாணம் வந்து சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நோர்வேயைச் சேர்ந்த திருகோணமலை கண்காணிப்புக் குழுத் தலைவர் ஆடன் ஹோம் —

நோர்வேயைச் சேர்ந்த மட்டக்களப்பு - அம்பாறை கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜோஹான் கபிரியேல்சன் — ஆகியோர் இன்று கொழும்புக்குச் செல்வர்.

கொழும்பில் தங்கியிருக்கும் நெதர்லாந்தைச் சேர்ந்த யாழ் — மன்னார் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஓய்வு பெற்ற லெப்டினன்ட் கேணல் போல் ஹென்றி ஹோல்டிங் —

கனடாவைச் சேர்ந்த வவுனியா - முல்லைத்தீவு கண்காணிப்புக் குழுத் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சிலிவ் மில்னே — ஆகியோருடன் இணைந்து இந்த நால்வரும் விமான மூலம் பலாலிக்கு வந்து சேருவர்.

அங்கிருந்து ஹெலி மூலம் நாளை யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்திய பின்னர் அவர்கள் நாளையே கொழும்பு திரும்புவர் என்றும் —

உடன் தமது பணிகளை ஆரம்பிப்பர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. [இ-3]

முச்சந்தி முரலி



மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் பாருங்கோ..!

## பிரபா பிறந்த நாளில் ஹோட்டல் திறப்புவிழாவா?

### இரகசியப் பொலீஸார் விசாரணை

கொழும்பு, பெப் 4

இரகசியப் பொலீஸாரின் கழுகுக் கண்களுக்கு காண்பது எதிலுமே சந்தேகம் தான்!

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச தரத்திலான ஹோட்டல் ஒன்றின் திறப்புவிழா குறித்தும் அவர்கள் "நோண்டுவதற்கு"த் தொடங்கியுள்ளார்கள்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 26 ஆம் திகதி பிரஸ்தாப ஹோட்டல் திறந்து வைக்கப்பட்டதால்—

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையிலேயே அவ்வாறு செய்யப்பட்டிருக்கவேண்டும் என்று ஒரு சந்தேகம் இந்த இரகசியப் பொலீஸாருக்கு;

தங்கள் சந்தேகம் குறித்து விசாரிப்பதற்கு முன்னர் சட்ட அனுமதியும் பெற்றிருக்கிறார்கள்.

தமது விருப்பத்தை கோட்டை நீதிவானிடம் ஒரு விண்ணப்பமாகச் சமர்ப்பித்து, விசாரணை செய்வதற்கு அனுமதியும் பெற்றுவிட்டார்கள்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பொறியியலாளர் கொழும்புக்கு அழைப்பு

கொழும்பு, பெப். 4

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரை புனரமைப்புப்பணிகளை மேற்கொள்ளத் தேவையான மதிப்பீடுகளை செய்ய வடபகுதி பொறியியலாளர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துப்பாதை, மின்சாரம், தொலைத்தொடர்பு வேலைகளை உடன் ஆரம்பிக்கும் வகையில் இந்த மதிப்பீடு செய்யப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை துரிதப்படுத்த அமெரிக்கா வற்புறுத்து

## சமாதான முயற்சிகளை குழப்பும் செய்தியாளர்கள்

### ஹமில்டன் கண்டனம்

செய்தியாளர்கள் சிலர் வேண்டுமென்றே சமாதான முயற்சிகளுக்குப் பாதகமான செய்திகளை எழுதுவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கவலை தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் அண்மையில் திருகோணமலைக்கு விஜயம் செய்திருந்தார்.

அப்போதே அவர் போர் இடைநிறுத்தம் சம்பந்தமாக சில பத்திரிகைகளில் வெளியிடப்படும் செய்திகள் குறித்துக் கண்டித்தார்.

திருகோணமலை மாவட்டத்திலும் போர் இடைநிறுத்தம் வெற்றிகரமாகப் பேணப்படுவதாக பாதுகாப்புச் செயலாளர் கருத்து வெளியிட்டபோது

செய்தியாளர்கள் சிலர் அவரிடம் கேள்வி கேட்டனர். அவற்றுக்குப் பதிலளித்த பினனர் அவர் பின்வருமாறு தெரிவித்தார்:-

சில செய்தியாளர்கள் அதிகாரிகளுடன் தொலைபேசியில் பேசுகிறார்கள். அவர்கள் கொடுக்கும் குறைந்தளவு தகவல்களைப் பெரிதுபடுத்தி, சமாதான முயற்சிகளுக்குப் பாதகமான செய்திகளைப் பிரசுரிக்கிறார்கள் — என்றார்.

## தற்போதைய நிலைமை குறித்து லக்ஷ்மன் கதிர்காமர் விளக்கினார்

வாஷிங்டன், பெப்ரவரி 4

இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டிய அவசியத்தை அமெரிக்க ராஜாங்க அமைச்சர் வாரன் கிறிஸ்தோபர், இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் வற்புறுத்தினார்.

அமெரிக்கா சென்றுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் வாஷிங்டனில் வாரன் கிறிஸ்தோபரைச் சந்தித்த போதே இது பற்றித் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பின் போது விடுதலைப் புலிகளுடன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசு எடுத்துள்ள முயற்சிகளையும் —

மனித உரிமைகளைப் பேண இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் வாரன் கிறிஸ்தோபர் பாராட்டினார் என்று தெரிவிக்கப்பட்டது.

வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையை ஈடுசெய்ய தேவையான உதவிகளை வழங்க அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் வாரன் கிறிஸ்தோபர் உறுதியளித்தார்

இலங்கை அரசு மீது அமெரிக்காவுக்கு நம்பிக்கை உண்டு என்றும் —

கூடுதலான நிதியை வழங்க அமெரிக்கா தயாராக இருப்பதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசு எடுத்துள்ள முயற்சிகளை பாராட்டிய அவர் இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

தற்போது இலங்கை அரசு எடுத்து வரும் சமாதான முயற்சி நடவடிக்கைகளுக்கு வாஷிங்டனின் ஆதரவை இலங்கை வெளிவிவகார அமைச்சர் அவரிடம் கோரி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பூநகரி குறித்து அரசு முடிவு எடுத்துவிட்டதாம்

கொழும்பு. பெப். 4

பூநகரி - சங்குப்பிட்டிப் பாதையை திறக்கும் விடயத்தில்—

பூநகரியில் உள்ள இராணுவ முகாமை ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு நகர்த்துவதை மட்டுமே செய்யமுடியும்—

அதற்குமேல் அது சம்பந்தமான வேறு எந்தக்கோரிக்கையையும் பரிசிலனை செய்யமுடியாது— என்று அரசாங்கம் இறுதி முடிவு எடுத்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

முப்படைத் தளபதிகளுடன் கடந்த வாரம் நடத்திய நீண்ட பேச்சின் பின்னர் ஜனாதிபதி சந்திரிக்கா இந்த முடிவுக்கு வந்திருப்பதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது இந்த முடிவை ஜனாதிபதி விடுதலைப் புலிகளுக்கு கடந்த திங்கட்கிழமை அறிவித்துவிட்டார் என்று "தஜலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது [அ]

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் பெரியளவில் மாற்றங்கள் வரும்

கொழும்பு, பெப். 4

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவின் தலைமை அதிகாரியாக பிரதிப் பொலீஸ் மா அதிபர் விக்ரர் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதுவரை அனுராதபுரத்தில் பணிபுரிந்தார்.

இவரது நியமனத்தைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு நடைமுறைகளில் பெரும் மாற்றங்கள் கொண்டுவரப்படும்" என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி வசிக்கும் அலரி மாளிகையில் வெடி மருந்துப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் ஓர் அங்கமாகஇருந்த கொமாண்டோ படை அணியின் இரண்டாவது றெஜி

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## கென்னத் பெர்னாண்டோ யாழ்ப்பாணம் வருகை

யாழ்ப்பாணம் பெப். 4

அங்கிலிக்கன் பேராயர் கென்னத் பெர்னாண்டோ அவரது மனைவி மற்றும் நான்கு பேர் கொண்ட குழு நேற்று இரவு யாழ்ப்பாணம் வந்து சேர இருந்தது—

தென்னாசிய தேசிய கிறிஸ்தவ மன்ற செயலாளர் வண கலாநிதி நியான்சி பெரேரா, அங்கிலிக்கன் சபையின் குரு முதல்வர் வண. கலாநிதி டொனால்ட் கனகரட்ணம் வண. சர்வானந்தன், அருட் சகோதரி சந்திராணி பீரிஸ் ஆகியோரே இந்த நால்வரும் ஆவர். —

பேராயரின் யாழ் விஜய வழிபாட்டு ஆன்மீகக் கூட்ட நிகழ்ச்சிகள் சுண்டுக்குளி பரியோவான் தேவாலய

[6 ஆம் பக்கம் பார்க்க[

## 600க்கு மேற்பட்ட முறைப்பாடுகள்

கொழும்பு. பெப். 4

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பழிவாங்கல் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவுக்கு இதுவரை 600ற்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஐ. தே. கவின் ஆட்சியில் பலர் தனிப்பட்ட அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இத்தகையோர் பற்றி விசாரித்து தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பிரதி அமைச்சர் மகிந்த விஜயசேகர தலைமையில் 5 பேர் கொண்ட விசாரணை குழு [illegible] வாழ்வு, புனரமைப்பு அமைச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வெட்டுப்புள்ளி

94 / 95 கல்வி ஆண்டுக்கான பல்கலைக் கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விபரம் 6 ஆம் பக்கத்தில்

## மாட்டுவண்டியை எரிப்பதற்கு முயற்சி

### பல்கலைக்கழகத்தில் சம்பவம்

யாழ். பல்கலைக்கழகத்துக்கு முதலாம் வருட மாணவர்கள் இருவர் சென்ற மாட்டு வண்டியை எரிக்க நேற்று முயற்சிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாணவர்கள் சைக்கிளில் சென்ற சமயம் இவர்களுக்கும் சிரேஷ்ட மாணவர்கள் சிலருக்கும் இடையில் "ராக்கிங்" தொடர்பாக ஏற்பட்ட தர்க்கத்தையடுத்து இருவரின் சைக்கிள்களும் சேதம் ஆக்கப்பட்டதாகவும்-

அதையடுத்து அவர்கள் மறுநாள் மாட்டுவண்டியில் பல்கலைக்கழகம் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அந்த மாட்டுவண்டியையே சில மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் வைத்து எரிக்க முயற்சித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர் அவை நேற்றுக் கூடி இவ்விடயம் குறித்து ஆராய்ந்தது. [இ-3-7]

## ஹொரகொல்லவில் கைதானவர் புலிகளுக்கு தகவல் கொடுப்பவராம்!

### 15 பேருக்கு மேல் இதுவரை விசாரணை

கொழும்பு, பெப் 4

ஹொரகொல்லவில் உள்ள பண்டாரநாயக்கா சமாதியைப் படம் பிடித்த பொன்னையா ஜீவரத்தினம் என்பவர் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தகவல் கொடுப்பவர்களில் ஒருவர் என்று இரகசியப் பொலீஸார் தெரிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்காகவே தாம் அந்தப் படங்களை எடுத்ததாக அவர் வாக்கு மூலம் அளித்துள்ளதாகப் பொலீஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஹொரஹொல்லை சமாதிக்கு விஜயம் செய்த திருமணக் கோஷ்டி ஒன்றில் வந்த இரண்டு யுவதிகளுடன் சிங்களத்தில் சரளமாகக் கதைத்து

[ 6 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், பெப். 4

ஸ்ரீலங்காவில் இன்று நடைபெறவுள்ள சுதந்திரதினக் கொண்டாட்டத்தை ஒட்டி தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன

இராணுவத்தினரும் பொலீஸாரும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பின் சகல நுழைவுப் பாதைகளிலும் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் —

தமிழர்கள் தங்கும் விடுதிகளில் பொலிஸார் தீவிர சோதனைகளை நடத்தி வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ-4)

## பகிஷ்கரிப்பு

கொழும்பு, பெப் 4

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தை மூடியதை ஆட்சேபித்து பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். (இ-3 6)

## அரசமைப்பு சீர்திருத்த யோசனையை தமிழ்கட்சிகள் இணைந்துசமர்ப்பிக்கும்

கொழும்பு, பெப். 4

அரசமைப்பு சீர்திருத்தங்களுக்கான யோசனைகளை தமிழ்க்கட்சிகள்ஒன்றிணைந்து முன்வைக்க வேண்டும். இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சி [illegible] துள்ளோம் [illegible] திரு. எஸ் தொண்டமான் மேற்கண்டவாறு கூறினார்.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க்கட்சிகளுக்கு வெவ்வேறான கொள்கைகள், கோட்பாடுகள் இருக்கலாம். ஆனால் பல்வேறு விடயங்களில் இவை அனைத்தும் ஒத்த கருத்துடையவையாகவே உள்ளன.

குறிப்பாக தமிழர் பிரச்சினையில் ஒன்றிணைந்துசெயல்பட வேண்டிய தேவை உள்ளது.

வடக்கு -கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ்க்கட்சிகளின்தலைவர்கள் அரசமைப்பு சீர்திருத்தத்துக்கான யோசனைகளை ஒன்றிணைந்து முன்வைக்கவேண்டும்.

இப்படி தொண்டமான் மேலும் கூறினார். [இ-3]

## கல்வி மேம்பாட்டு பேரவையின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 4

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்ட தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் தேசியத் தலைவரின் பணப்பரிசில்களையும் —

பாராட்டு சான்றிதழ்களையும் —

வெற்றிப் பதக்கங்களையும் பெறுபவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகிறோம்

இன்று 04-02-1995இல் திருமணம் நடைபெறவிருக்கும் யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறையில் சடமையாற்றும்

**திரு. திருமதி**
**தயானந்தன், றஜனி**
(சுண்டிக்குளி)

தம்பதியினரை வளம்பல பெற்று, பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம்.

விலங்கியல்துறையினர்.
யாழ். பல்கலைக்கழகம்.

(35028)

## வாழ்த்துகிறோம்

இன்று 04 - 02 - 1995 திருமணம் நடைபெற இருக்கும் யாழ். பல்கலைக்கழக விலங்கியல் பகுதியில் கடமையாற்றும்

**திரு. பொ. விமலானந்தன்**
(புத்தூர் கிழக்கு)
**தம்பதியினரை**

வளம் பல பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம்.

விலங்கியற்துறையினர்,
யாழ். பல்கலைக்கழகம்.

[35029]

## NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

**விசேட சிங்கள வகுப்புக்கள்**

1. பேச்சு சிங்களம்
2. அரச ஊழியர்களுக்கானது
3. G. C. E. (O/L) சிங்கள மொழி II

ஆசிரியர்
**E. S. PIYADASA**
(SINHALA TRAINED TEACHER)

ஆரம்பம்: **05 - 02 - 1995**
Sun. 3-00 p. m.

[சி-497]

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

## அறிவித்தல்

சுன்னாகம் புகையிரத நிலைய வீதியில் எமது சங்கத்தின் 6ஆவது கிளை நிலையம் திறக்கப்படவுள்ளது. அங்கு பால் கொள்வனவும் விற்பனவும் 06 – 02 – 1995 ஆம் திகதி பிற்பகல் 1-30 மணி தொடக்கம் நடைபெறும் என்பதை சகல அங்கத்தவர்கள் வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

– பொது முகாமையாளர்.

[சி-500]

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 27 – 12 – 1936
உதிர்வு: 17 – 01 – 1994

அமரர்
**நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்**
(காரைநகர்)
[கலைவாணி நகை மாளிகை உரிமையாளர், யாழ்ப்பாணம்]

ஆண்டுத்திதி: **04–02–1995** (சனிக்கிழமை)

தன்னையே தீபமாக்கி
தரணியில் எம்மைக் காத்த
தந்தைக்கு அவனி தன்னில்
அர்ப்பணம் எதைத்தான் செய்வோம்.
பொன்போல பாதுகாத்து பொக்கிஷமாய் போற்றி
பாசமெனும் மழைபொழிந்து பண்புடனேயே
அறிவெனும் ஒளியினை அணையாவிளக்காக்கி
வழிநடத்தி வாழவைத்த எம் அருமைத் தந்தையே!
என்றும் உங்கள் பாதைதனை தொடர்வோம் யாமே!!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மகன், மகள்மார்,
மருமகன்மார், பேரன்மார்,
உறவினர், நண்பர்கள்.

இல, 136/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[35027]

## NEW SCIENCE ACADEMY

நெல்லியடி

**95 A/L** மீட்டல் வகுப்பு
**96 A/L**

CHEMISTRY
திரு. மணியம் B. Sc. (Hons.)

ஆரம்பம்: இன்று (04-02-1995)
4-45 p m.

[சி-496]

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்''

யாழ்ப்பாணம்
**அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்**

## நிகழ்ச்சிகள்

**04 – 02 – 1995** சனிக்கிழமை
நான்காம் நாள் நிகழ்ச்சிகள்

மாலை 5-30 மணி:
அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற மாணவிகள் )– பாட்டு, வயலின்

6-15 மணி:
திரு. R. S. கேசவமூர்த்தி — வயலினிசை
திரு. S. துரைராசா — மிருதங்கம்

7-15 — 8-30 மணி:
திரு. S. சிவஞானசேகரம் — பாட்டு
திரு. V. K. குமாரசாமி — வயலின்
திரு. S. மகேந்திரன் — மிருதங்கம்

[34956)

## A/L 95 மாலைநேர வகுப்பு

**பொருளியல்: S. வரதராஜன்**

ஆரம்பம்: **7-2-95** செவ்வாய்


✶ முன்கூட்டியே பெயர்களை பதிவு செய்பவர்கள் மட்டுமே வகுப்பிற்கு அனுமதிக்கப்படுவர்,

**BECON கல்வி நிலையம்**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

[சி/503]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**தம்பையா பாலசிங்கம்**
(குட்டித்தம்பி)

தோற்றம் 15-09-1921 — மறைவு 05-01-1995

திதி: பவ வருடம் மார்கழி மாதம் 20 ஆம் நாள் பூர்வபக்கசதுர்த்தி

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொண்டு ஆறுதலும் உதவிகளும் வழங்கியவர்களுக்கு எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக.

எமது இல்லத்தில் இன்று **4-2-95** சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் ஆறாத் துயருறும்;
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

[7891]

## விலங்கியல் செய்முறை பட்டறை

யாழ்ப்பாணம், பெப் 4
ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு உதவும் வகையிலான விலங்கியல் [பூச்சியியல்] செய்முறைப் பட்டறைகள் பல்வேறு கோட்டங்களிலும் நடைபெறவுள்ளன.

பல்கலைக்கழக மாணவரின் உதவியுடன் நடைபெறும் மேற்படி பட்டறையின் முதலாவது செயலமர்வு யாழ். இந்துக் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு ஆரம்பமாகும். [இ-14]

## றெட்பானா சிறுவர் தினம்

யாழ்ப்பாணம் பெப். 4
சிறுவர் உரிமைசாசனத்தை குறிக்கோளாகக் கொண்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் றெட்பானா சிறுவர் தினம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும்.

றெட்பானா ஸ்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் றெட்பானா திட்டத்திலுள்ள சிறுவர் — இளைஞர் கழகங்களிலும் றெட்பானாவின் பராமரிப்பில் உள்ள முகாம்களில் இயங்கும் கழகங்களிலும் உள்ள சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். [ஐ-4]

யாழ். பல்கலைக்கழகம்

**மகாபொல கொடுப்பனவு**

முதலாம் வருட மாணவர்களுக்கான 9ஆம், 10ஆம் தவணைப்பணமும், ஏனைய மாணவர்களுக்கான 10ஆம் தவணைப்பணமும் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக்கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவிற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தற் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

— பதிவாளர்.
(சி/499)

"கணபதியே வருவாய்"

## நூல் வெளியீட்டு விழா

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் 29 - 1 - 1995 அன்று நிகழ்ந்த மேற்படி விழா சிறப்புற உதவிய அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்
நவாலியூர் நா. சச்சிதானந்தன்
நூலாசிரியர்

கோண்டாவில்.
4 - 2 - 1995.

(35036)

## பகிரங்க அழைப்பாணை

**தமிழீழ மாவட்ட நீதி மன்றம்**
**சுன்னாகம்**

இல. மணநீக்கம் 119/94

திருமதி
முத்துலட்சுமி செல்வநாதன்
சுன்னாகம் மேற்கு
சுன்னாகம்

வழக்காளி

எதிராக

முருகுப்பிள்ளை செல்வநாதன்
மே/பா. மு. செல்வராசா
அம்மன் கோவிலடி,
சூராவத்தை, சுன்னாகம்

எதிராளி.

இந்த 1995ம் ஆண்டு மாசி 1ம் திகதி
மேற்படி வழக்காளி சுன்னாகம் மாவட்ட நீதி மன்றில் திரு. முருகுப்பிள்ளை செல்வநாதன் ஆகிய உமக்கு எதிராக மணநீக்கம் 119/94 என்ற வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

எனவே 15-2-1995 திகதி அன்று காலை 9-00 மணிக்கோ அதற்கு முன்னரோ இந் நீதிமன்றில் தோன்றிக் குறித்த மணவிலக்கு ஆட்சேபனை ஏதாவது இருப்பின் தெரிவிக்குமாறு வேண்டப்படுகிறீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பதிவாளர்

என்னால் வரையப்பட்டது
வழக்காளியின் சட்டவாளர்.

(5775)

## தசாக, கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்,
பவ வருஷம் தை மாதம் [**28-01-95**] சனிக்கிழமை இரவு சிவபதமடைந்த மாவை குமாரசுவாமிக் குருக்கள் (செல்லக் குருக்கள்) அவர்களின் பிரிய தர்மபத்தினி

**ருக்குமணி அம்மாள் அவர்களின்**

ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

**06-02-95** திங்கட்கிழமை தசாகம் [**1.00** மணி]
**09-02-95** வியாழக்கிழமை கிருகயக்ஞம்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலையே அழைப்பிதழாக ஏற்று கிரியைகளில் பங்குபற்றும் வண்ணம் வேண்டுகின்றோம்.

பா. குமாரசுவாமி சர்மா குடும்பத்தினர்
பா. கங்காதர சர்மா குடும்பத்தினர்

ஜெயந்தன் வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்

(35035)

உ
தேவி மயம்

சாவகச்சேரி - நுணாவிற்குளம்

## ஸ்ரீ கண்ணகை அம்பாள் தேவஸ்தானம்

## ஜீர்ணோத்தாரண புனராவர்த்தன நவகுண்ட மகாயாக

## ★ மகா கும்பாபிஷேகம் ★

தை 19 ஆம் நாள் [02 – 02 – 95] வியாழக்கிழமை பின் இரவு 4-00 மணி முதல் கும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தை 22 ஆம் நாள் [05 – 02 – 94] ஞாயிறு மு. ப. 11 மணி முதல் பி.ப. 5-00 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழும்.

தை 23 ஆம் நாள் [06 – 02 – 95] திங்கள் மு. ப. 9-42 மணி முதல் 10-24 மணி வரை வரும் சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கூடியுள்ளது.

பிரதிஷ்டா பிரதம குரு:

சிவபூஜா துரந்தரர்
**சிவஸ்ரீ பாலவைத்தியநாத சிவாச்சாரியார்**
(ஊரெழு)

**ஆலய பரிபாலன சபை**

நுணாவிற்குளம்.
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

[35034]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை.

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து கீழே குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 95-03-31 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தாவரவியலில் பேராசிரியர்.
2. புள்ளி விவரவியலில் பேராசிரியர்.
3. பௌதிக இரசாயனவியலில் பேராசிரியர்.

சம்பள அளவுத்திட்டம்:

பேராசிரியர்
ரூபா 16,100 —
6 X 400 — 18,500/-

இத்துடன்,

அ) நிலுவையிலுள்ள வேலை நிறைவேற்றுப்படியாக 1995 ஜூன் 30ஆம் திகதி வரை சம்பளத்தின் 25% சதவீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

ஆ) ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தினதும், நிலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான ஆண்டுப் படியின் 10%மும் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் புத்தகப் படியாகச் செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் திகதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும், விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23X10 ச.மீ., அளவுடைய, சுயமுகவரியிட்ட ரூபா 1/- முத்திரையொட்டப்பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களில் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

குறிப்பு:

விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும் கொழும்பு-13, ஆட்டுப்பட்டித் தெரு, 154 ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995-01-26.

(சி-479)


# அரசின் சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்க வேண்டாம்

## மக்களிடம் அமைச்சர் அனுருத்த வேண்டுகோள்

கொழும்பு, பெப் 4

வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கம் எடுத்துவரும் பாரிய முயற்சிகளுக்கு இடைஞ்சலோ தடையோ ஏற்படுத்த வேண்டாம் என்று எமது எதிர்கால சந்ததியின் பெயரால் வடக்கிலும் தெற்கிலும் உள்ள மக்களையும் ஸ்தாபனங்களையும் கோருகிறேன்.

— பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண ஆளுநர் ஸ்ரான்லி திலகரட்ணாவுடன் கண்டியில் உள்ள அவரது அலுவலகத்தில் கலந்துரையாடல் நடத்திய அமைச்சர் ரத்வத்தை பின்னர் அங்கு நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்து முன் கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வுகாண மூன்று நடவடிக்கைகள் கொண்ட வேலைத்திட்டம் ஒன்றை அமுல் நடத்துவதற்கான முன்முயற்சியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொ. ஐ. முன்னணி அரசு எடுத்துள்ளது என்றும் அமைச்சர் அனுருத்த தெரிவித்தார்.

அரசின் இந்த மூன்று நடவடிக்கைகளைக் கொண்ட வேலைத்திட்டம் குறித்தும் அமைச்சர் அனுருத்த ரத்வத்தை விளக்கமளித்தார்.

நாட்டில் உள்ள அனைத்து இனக்குழுக்களிடையேயும் பரஸ்பர புரிந்துணர்வையும், நல்லெண்ணத்தையும் கட்டியெழுப்புவது முதல் நடவடிக்கையாகும். இதற்காகவே மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. சிறுசிறு அசம்பாவித சம்பவங்கள் இடம்பெற்றபோதிலும் மோதல் தவிர்ப்பு 95 சதவீதம் வெற்றியளித்துள்ளது.

யுத்தத்தினால் சீரழிந்த வடக்கு-கிழக்குப் பகுதியில் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது இரண்டாவது நடவடிக்கையாகும். இது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

யுத்தத்தினால் சீரழிக்கப்பட்ட மின் விநியோகத்தை மீண்டும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று பெருந்தெருக்கள், தபால்சேவை என்பவற்றையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நீடித்த, குறுகிய திட்டங்களின் அடிப்படையில் 3 ஆயிரத்து 900 கோடி ரூபா செலவில் இந்த அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

நிரந்தர அரசியல் தீர்வைக் கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவது இறுதி நடவடிக்கையாகும். விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை அரசாங்கம் நம்புகிறது. சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற அரசாங்கம் ஏற்கனவே தொடங்கிவிட்டது.

— இவ்வாறு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை மேலும் தெரிவித்தார். [ஐ]

# ஆயுதங்களை களவாடிக் கொண்டு விடுமுறையில் செல்லும் படையினர்

## தெற்கில் பாதுகாப்புக்கு புதிய அச்சுறுத்தல்

விடுமுறையில் செல்லும் படையினர் தம்முடன் களவாக ஆயுதங்களையும் எடுத்துச் செல்வதால் தெற்கில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு புதிய அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது.

விடுமுறையில் செல்லும் இராணுவத்தினர் தம்முடன் கைக் குண்டுகள், துப்பாக்கி ரவைகள் என்பவற்றை எடுத்துச் செல்வதாகவும் இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதாகவும் இராணுவப் புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது.

இத்தகைய சட்ட விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக விடுமுறையில் செல்லும் பாதுகாப்புப் படையினரை விசேட சோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (ஐ-5)

# வடபகுதியில் வீதிகள், பாலங்களை புனரமைக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, பெப்.4

வட பகுதியில் அவசரகால புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டத்தை மேற்கொள்வதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளில் பாதைகள், பாலங்களின் புனரமைப்புமுக்கிய இடத்தை வகிக்கின்றது.

இலங்கை வானொலிச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வீதிகளும், பாலங்களும் பெரும் சேதத்துக்குள்ளாகியுள்ளன. உள்ளூர் பாதைகள், தாம் போதிகள், சிறிய பாலங்கள் ஆகியனவும் இவற்றில் அடங்கும்.

யுத்தத்தின் காரணமாக இவற்றுக்கு பெரும் பாதிப்பு மறைமுகமாக ஏற்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் புனர்வாழ்வுக்கும், புனரமைப்புக்காக ஆட்களைக் கொண்டு செல்வதும் — இயந்திரங்கள், பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு செல்வதும் — முக்கியமானவையாகும்.

இதற்கு முன் வடக்கில் உள்ள பாதைகளை புனரமைப்பு செய்வது அவசியம் என அரசாங்கம் கருதுகிறது.

685 கிலோமீற்றர் நீளமான முதல்தர, இரண்டாம் தர வீதிகள் புனரமைப்புச் செய்யப்படும்.

144 கிலோ மீற்றர் நீளமான கண்டி —யாழ்ப்பாணம் வீதி —

107 கிலோ மீற்றர் நீளமான மன்னார் – நாவற்குழி வீதி—

75 கிலோ மீற்றர் நீளமுள்ள வவுனியா — மன்னார் வீதி—

தலா 50 கிலோ மீற்றர் நீளமுள்ள முல்லைத்தீவு— பரந்தன், மாங்குளம்— முல்லைத்தீவு வீதிகள்—

30 கிலோ மீற்றர் நீளமுள்ள யாழ்ப்பாணம்— பருத்தித்துறை வீதி—

பருத்தித்துறை — மாதகல் வீதி, இவை முதலாந்தர, இரண்டாம் தர வீதிகளில் அடங்கும்.

அதே போல 3 ஆம், 4 ஆம் தரவீதிகள் பழுதுபார்க்கப் படவிருக்கின்றன. இவற்றின் நீளம் சுமார் 125 கிலோ மீற்றராகும்.

புளியங்குளம் — முல்லைத்தீவு பாலம், வன்னிப் பாலம், சங்குப்பிட்டியில் உள்ள துறைமுக மேடை, தாம்போதிகள், பாலங்கள் போன்றவையும் பழுது பார்க்கப்படவிருக்கின்றன.

—இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# யுத்தம் வேண்டாம் கோஷத்துடன் இரத்தினபுரியில் பாதயாத்திரை

கொழும்பு, பெப். 4

யுத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இரத்தின புரியில் கடந்த 26 ஆம் திகதி பாதயாத்திரை ஒன்று நடைபெற்றது.

இரத்தினபுரி இ. போ. ச. பஸ் டிப்போக்கு அருகில் உள்ள ஸ்ரீ சுதர்வேதய விகாரையில் இருந்து ஆரம்பமான இந்த பாதயாத்திரை நகரவீதிகளூடாகச் சென்று மாநகரசபையில் முடிவடைந்தது.

ஜனநாயக உரிமைகள் பேணும் இயக்கத்தின் இரத்தினபுரி கிளையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பாதயாத்திரையில் கலந்து கொண்ட பெரும் எண்ணிக்கையான மக்கள் ''யுத்தம் வேண்டாம்; சமாதானமே வேண்டும்'' என்று கோஷமிட்ட வண்ணம் சென்றனர். (இ-3)

# சுவாமி விவேகானந்தரின் வழியில் ஏழைகளின் துயர் தீர்க்க வேண்டும்

## யாழ். அரச அதிபர் உரை

'ஏழைகளின் துயர் தீர்க்க இளைஞர்களை ஒன்று திரட்டித் தீவிரமாக உழைத்தவர் சுவாமி விவேகானந்தர். அவரின் வழியை நாம் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும்.'

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் தேசிய இளைஞர் தின விழாவில் பேசிய யாழ். மாவட்ட அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம்கூறினார்.

யாழ். பல்கலைக் கழக பொருளியல் துறை விரிவுரையாளர் திரு. ம. நடராசாசுந்தரம் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் இவ் விழா நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

உன்னிடம் உள்ளதைக் கொடு என்ற சுவாமி விவேகானந்தரின் போதனை இன்றைய சூழலில் எத்தகைய முக்கியத்துவம் பெறுகிறது என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். 198 அகதி முகாம்களில் உள்ள 46 ஆயிரம் குடும்பங்களும் கிராமப்புறங்களில் ஆதரவற்று வாழும் ஒரு லட்சத்து 86 ஆயிரம் குடும்பங்களும் பல்வேறு அல்லல்களைச் சந்திக்கின்றனர். துன்புறும் மக்களுக்கு ஆறுதல் தரும் சேவைகளை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் செய்கிறது. அந்த வகையில் இன்று கொண்டாடப்படும் சுவாமி விவேகானந்தர் தேசிய இளைஞர் தினம் முக்கியத்துவம் பெறுகிறது என்றார்.

சுவாமி [illegible] தமது உரையில் கூறியதாவது;

சுவாமி விவேகானந்தர் பேச்சிலல்ல செயல் வீரராக விளங்கினார். இறை பக்தியுடனான மானிட நேயம் மிக்க வாழ்க்கையே உண்மையானது என்பதை அவர் மூலமாக உலகின் பல்வேறு பகுதிகளும் உணர்ந்து கொண்டதால்தான் முப்பதுக்கும் மேற்பட்ட இராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமங்கள் உலகெங்கும் அமைந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினர்.

மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல், பருத்தித்துறை பிரதேசச் செயலர் திரு. ஆ. சிவசுவாமி திரு. க. கமலசேகரம் திரு. ஆர். சிவநாதன் ஆகியோரும் பேசினார்கள்.

இந்நிகழ்வில் சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ [illegible] இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றன. (ஐ-111)

## புலிகளின் குரல் வானொலியில்

04 — 02 — 1995

சனி இரவு

★ 8-01 — தாயகப்பாடல்கள்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கலந்துரையாடுவோம்– ''தமிழ்ப் பெண்களின் எதிர்காலம்''
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

05 — 02 — 1995

ஞாயிறு காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 — மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

சனி மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாடி வினாப் போட்டி — போட்டியிடும் பாடசாலைகள் சாவகச்சேரி றிபேக் கல்லூரி, உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
★ 6-00 சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — பாமாலை
★ 6-15 — என் தெரிவு
★ 6-30 — மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

## 'டெலிக்' கற்கை நெறி

யாழ்ப்பாணம், பெப், 4

மாவட்ட ஆசிரியர் சேவையில் ஆங்கில உதவி ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான ''டெலிக்'' கற்கைநெறி எதிர்வரும் 7ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இக் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் கற்கை நெறி இணைப்பாளரை சந்திக்குமாறு யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## இசை விழாவில் இன்று

நல்லை ஆதீனத்தில் நடைபெற்றுவரும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் தமிழிசை விழாவில், நான்காம் நாளான இன்று சனிக்கிழமை மாலை 5-30மணிக்கு மன்ற மாணவிகளின் பாட்டு. 6-15 மணிக்கு திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தியின் வயலினிசை, 7-15 மணிக்கு திரு. எஸ். சிவஞானசேகரத்தின் பாட்டு என்பன நடைபெறும். [ஐ-111-14]


பகிரங்க ஏலவிற்பனை

தமிழீழ மாவட்ட நீதிமன்றம்
சுன்னாகம்

இம்மன்றின் வழக்குகளில் பாரப்படுத்தப்பட்டு, உரிமை கோரப்படாத சான்றுப் பொருள்களாகிய போத்தல்கள், பிளாஸ்ரிக் கான்கள், இரும்புக்கம்பிகள், எஸ்லோன் குழாய்கள், கத்திகள், அலுமினியம் பாத்திரங்கள் போன்ற வேறு பல சான்றுப் பொருள்களும் 06 - 02 - 95 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு இம்மன்றில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். பொருள்களை வாங்குவோர் பணத்தைச் செலுத்தி பொருள்களை உடன் எடுத்துச் செல்லவேண்டும்.

மன்றின் கட்டளைப்படி,
பதிவாளர்.

தமிழீழ மாவட்ட நீதிமன்றம்,
சுன்னாகம்.
30 - 01 - 1995

(சி-493)

புதிய பெரடேனியா இன்ஸ்ரிரியூட்
கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

(O/L DAY CLASS பகல்நேர வகுப்புகள்)
ஆரம்பமாகின்றன.

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — இரா. அருட்செல்வம் |
| சமூகக்கல்வி | — இரா. கணேஸ் |
| ஆங்கிலம் | — எஸ். சந்திரமௌலி |
| வர்த்தகம் | — எஸ். பரமசிவம் |
| விவசாயம் | — எம். சிவலிங்கம் |
| சித்திரம் | — முத்து இராதாகிருஷ்ணன் |
| தமிழ், சமயம் | — ஞான. திருக்கேதீஸ்வரன் |

[சி-342]


## அரசாங்க அறிவித்தல்

மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம்

### 1995 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களையும், திருத்துநர்களையும் பதிவு செய்தல்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நிறுவனங்களிற்கு (வைத்தியசாலைகள் உட்பட) தேவையான பின்வரும் பொருள்களை வழங்கக்கூடியவர்களிடம் இருந்தும், இயந்திரங்களைத் திருத்தக் கூடியவர்களிடம் இருந்தும் மறுபத்தியில் குறிப்பிடப்படுவோரிடமிருந்து பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. காகிதாதிகள்
02. பாவனைப் பொருள்கள் (ஈர்க்கு விளக்குமாறு, தும்புத்தடி, சவர்க்கார வகைகள்)
03. வைத்தியசாலைப் பாவனைக்கான துணிவகைகள்
04. மரத்தளபாடங்கள், திருத்த வேலைகள்
05. உருக்குத் தளபாடங்கள், உருக்குத் தளபாடத் திருத்த வேலைகள்
06. பிளாஸ்ரிக் பொருள்கள் (வாளி, குப்பைக்கூடை, குப்பை வாளி முதலியன)
07. இரும்பு, பித்தளை, கன இரும்புப் பொருள்கள், (ஆமைப் பூட்டுக்கள், வாளி வகைகள், குப்பை வாளி, மண்வெட்டி, அலவாங்கு, கத்தி, கோடரி முதலியன)
08. மின்சார உபகரணங்கள், உதிரிப் பாகங்கள், மின்சார இயந்திர திருத்த வேலைகள்
09. வைத்தியசாலை உபகரணங்கள் (சேலைன் ஸ்ராண்ட், கட்டில்கள், சிறுகட்டில்கள், சத்திர சிகிச்சை உபகரண நிலைகள்)
10. கட்டடத் திருத்தத்திற்கு அவசியமான பொருள்கள், கட்டடத் திருத்தம்
11. மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் (டயர், டியூப் உட்பட) வாகனத் திருத்தம்
12. தட்டச்சு இயந்திரம், றோணியோ இயந்திரம், நிழல் பிரதி எடுக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள், திருத்த வேலைகள்

பதிவு செய்யத் தகைமையானோர்

1. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
2. கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனங்கள்
3. பதிவு செய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கங்கள்
4. கிராமோதய சபைகள்
5. கிராம அபிவிருத்திச் சங்கங்கள்
6. சனசமூக நிலையங்கள்
7. வருமானவரி செலுத்தும் பிரசித்தி பெற்ற நிறுவனங்கள்

மேற்படி வழங்குநர்களாகவும் திருத்துநர்களாகவும் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தைக் கீழ்க் காணும் விலாசத்தில் உள்ள எமது பணிமனையில் ரூபா 25/- பதிவுக் கட்டணமாகச் செலுத்திப் பெற்று 17-02-1995 வெள்ளிக்கிழமை காலை 11-00மணிக்கு முன் எனக்குக் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படலாம்.

1995ஆம் ஆண்டிற்கு தேவையான பொருள்கள் கொள்வனவு செய்வதற்கும், இயந்திரங்கள் திருத்துவதற்கும் கேள்விகள் பதிவு செய்யப்பட்டவர்களிடம் இருந்து மட்டும் கோரப்படும்.

வைத்தியகலாநிதி வை. ஸ்ரீகாந்தா,
பதில் மாகாண பிரதிப் பணிப்பாளர்,

சுகாதார சேவைகள் மாகாண-
பிரதிப் பணிப்பாளர் பணிமனை,
59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-449]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சகல வியாபாரத்திற்கும் தேவைப்படக்கூடிய சோகேஸ் காட்சியறை அலுமாரிகள், 20 அடி நீளம், 8 அடி உயரம் முதிரையிலான அலுமாரி ஆகியன நல்ல நிலையில் விற்பனைக்கு உள்ளது. அம்பிகை சென்ரர், இல. 109, பெரிய கடை, யாழ்ப்பாணம் முகவரியில் தொடர்பு கொள்ளவும். [34998]

பனசொனிக் [Panasonic Digital - AV - mixer - WJ / AVE – 5] நிக்கோன் FM - 2 ஸ்ரில் கமரா AE - 1 கனோன் ஸ்ரில் கமரா. MX - 10 பனசொனிக் மிக்ஸர். தொடர்பு: நீகல் வீடியோ, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை. [8217]

African Love Birds பல நிறங்கள், அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு மட்டும். தொடர்பு கொள்க: R. ஜெயராஜசிங்கம் (பபா), மே/பா S. சிவராஜன் களவியல் வத்தை வீதி (டச் வீதி அருகில்), உடுவில் மேற்கு. [35021]

இனிக் கோழிகள், பாபடிக்ஸ், பிறாமா மலிவான விலைக்கு விற்பனைக்குண்டு. A. ராஜன், இல. 86/3, புங்கன்குளம், அரியாலை (ஸ்ரேஷன் முன்பாக) [35019]

Broiler இறைச்சிக் கோழிகள் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து குறைந்த விலையில், அடைவைக்கக்கூடிய நல்லினக் கோழி முட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள் மற்றும் இதரை வாழைக்குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர். [35009]

### விற்பனைக்கு

African Love Birds ஆபிரிக்க லவ் பேர்ட்ஸ், சடை முயல்கள் விற்பனைக்கு உண்டு. 2-00 மணிக்குப் பின் வரவும். மனோன், அரசடி வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (35022)

### காவேரி சீயாக்காய் பவுடர்

மக்கள் நலனுக்கு இயற்கை அளித்த சீதனம், 80% சீயாக்காயும், 20% இயற்கைப் பொருள்களும், சேர்த்து தயாரிப்பது. சீயாக்காய் பவுடர் என்று கேட்காமல், காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். எங்கும் கிடைக்கும். [34909]

### காவோலை

செங்கைஆழியானின் புதிய நாவல் 'காவோலை' விற்பனையாகின்றது. விலை 30/-. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். [34933]

### தேவை

சிறிய தொழில் சம்பளத்துடன் செய்யக்கூடிய இளைஞர்கள் தேவை. விரும்பியோர் தொடர்பு கொள்ளவும்: கோவிந்தபிள்ளை விஜயகுமார், மிருதங்க தொழில் நிலையம், 192/1, நாவலர் றோட், பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். [34936]

### இலவச வகுப்பு

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் இலவச சோதிட வகுப்புகள் 5-2-95இல் ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் ஆரம்பமாகின்றன. ஆர்வமுடையவர் அனைவரும் இலவசமாகப் பயில அனுமதிக்கப்படுவர். (35008)

### குருக்கள் தேவை

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலுக்கு நித்திய பூசைகள் செய்ய குருக்கள் தேவை. இருப்பிட வசதிகள் உண்டு. விரும்புவோர் 10-2-95க்கு முன் நேரில் விண்ணப்பிக்கவும். தொடர்பு: நிர்வாக சபை, மூத்த நயினார் கோயில், ஆனைக்கோட்டை. [35000]

### வகுப்புக்கள்

Make up and Hair Dressing ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும் புதிய வகுப்புக்கள் 6-2-95 திங்கள் ஆரம்பமாக உள்ளன. சேர விரும்புவோர், தொடர்புகொள்ளவும். Yogi Home Science Academy நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர், யாழ்ப்பாணம். [34980]

### றபர் சீல்

3 மணி நேரத்தில் றபர்சீல் வேலை செய்து பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் ஸ்ரிக்கர் லேபள் விளம்பரங்கள் புளொக் தரமான முறையில் செய்து கொடுப்பவர்கள் மீண்டும் யாழ் நகரில் செல்வா றபர் சீல் தயாரிப்பாளர், 230, கே. கே. எஸ். வீதி, மேல்மாடி, யாழ்ப்பாணம். [8218]

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதத்தவர்களும் தொடர்பு கொள்ளவும்: சகல குறிப்புகளும் உண்டு. எல்லா நாட்களிலும் படம் குறிப்புடன் தொடர்பு கொள்ளலாம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: துர்க்கா திருமண சேவை, ''வளர்மதி இல்லம்'' கே. கே. எஸ். றோட், மல்லாகம். (7889)

### நற்செய்தி

மில்க்வைற் வியாபாரிகளுக்கு ஓர் நற்செய்தி. மில்க்வைற் நீலசோப் 72 கட்டிகள் அல்லது, பார்சோப் 1 டசின் கட்டிவரும் தாள்கள் 50 சேர்ப்பித்து அழகிய கைத்தறித் துவாய் ஒன்றைப் பெறுங்கள். ''மில்க்வைற்'' [சி-492]

### மரணம்

கடும் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஒருவர், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையின் பின்னர் மரணமானார்.

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் ஜெயதாஸ் (வயது 37) என்பவரே உயிரிழந்தவராவார்.

---

கோண்டாவில் கிழக்கு
அருள்மிகு
ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானம்

## புனருத்தாரண பிரதிஷ்டா
## மஹா கும்பாபிஷேகம்

**காலம்: 05-02-1995**
ஞாயிறு காலை 9-51 முதல் 11-24 வரை

**எண்ணெய்க் காப்பு**
இன்று சனி காலை 7-00மணிமுதல்
பி. ப. 4 00மணிவரை இடம்பெறும்

பிரதிஷ்டா பிரதம குரு
**சிவஸ்ரீ ஐ. மகேஸ்வரக் குருக்கள்**
[நயினை சுதுமலை அம்மன் தேவஸ்தானம்]

ஆலயபிரதம குரு:
**பிரம்மஸ்ரீ ந. இரவீந்திரசர்மா**

தொடர்ந்து ஆலய மண்டபத்தில் கட்டடத் திருத்த வேலைகளை நிறைவேற்றிய சிற்ப வல்லுநர்
**திரு. சி. சின்னத்துரை அவர்களும்**

வர்ண வேலைகளைப் பூர்த்தி செய்த நாச்சிமார் கோயிலடி கலாமணி
**சண்முகலிங்கம் ஞானகுரு**
அவர்களும்
பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதுடன்
**கலாமணி ஞானகுரு அவர்கள்**
**விஸ்வப்பிரம்மஸ்ரீ ஸ்தபதி சோமசுந்தர ஆச்சாரியார் அவர்களால்**
பட்டமளித்து கௌரவிக்கப்படுகின்ற
வைபவம் இடம்பெற உள்ளது.
அடியார்கள் யாவரும் கலந்து கொண்டு இறையருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.
நன்றி.

(35012) -பரிபாலனசபை.

---

# தில்லை சோதிட நிலையம்

கடலங்குடி சோதிட சாஸ்திர கல்லூரியில் பயிற்சி பெற்றவரும், சோதிட மேதை
**திரு. S. பார்த்தசாரதி**
அவர்களின் மாணவியுமான
**செல்வி ஜெ. தில்லையம்பலம்**
அவர்களிடம் சோதிடக் குறிப்புகள், திருமணப் பொருத்தங்கள் என்பவற்றில் நற்பலன் அறிந்து உங்கள் வாழ்வை முன்னேற்ற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;

**135, பருத்தித்துறை வீதி,**
(நல்லூர் சிவன் கோயிலுக்கு முன்பாக)

(34930)

---

## ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
# ஊக்குவிப்பு பயிற்சிகள்
**(கணிதம், தமிழ் விடைகளுடன்)**

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் ஒவ்வொரு மாணவருக்காகவும்

ஒவ்வொரு ஞாயிறும், வியாழனும் — கணிதம்
ஒவ்வொரு செவ்வாயும், சனியும் — தமிழ்

'ஊக்குவிப்பு வினாத்தாள்கள்' (விடைகளுடன்) எம்மால் வெளியிடப்படுகின்றன.

ஒரு வாரத்தில் — 2 கணிதம் + 2 தமிழ் வினாக்களுக்கு விடையளிக்க முடியும்.

4 வாரத்தில் [ஒரு மாதத்தில்] 8 கணிதம் + 8 தமிழ் வினாக்களுக்கு விடையளிக்க முடியும்

25 வாரத்தில் [6 மாதத்தில்] 50 கணிதம் + 50 தமிழ் வினாக்களுக்கு விடையளிக்க முடியும்

★ ஒவ்வொரு பயிற்சி வினாத்தாளையும் முற்றாகப் பயிற்சி பெறுவதன் மூலம் 6 மாத காலத்தில் எந்த ஒரு மாணவரும் ஆரம்ப அறிவிலிருந்து புலமைப்பரிசில் தகுதிக்கும் அதிகமான, பூரணமான, தெளிவான அறிவைப் பெறமுடியும். மாதிரி [Model] மாறினாலும் பரீட்சைகளில் வெற்றி பெற முடியும் என்பதைத் தீர்க்கமாக நம்புகிறோம்.

★ நேரடியாகப் பெற முடியாதவர்கள் கடிதம் மூலம் தொடர்பு கொண்டால் அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

**BOND INSTITUTES**
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[8223]

---

அம்பாள் துணை
ஓம் விராட் விஸ்வப்பிரம்மணே நம:

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் பவ வருடம் தைத்திங்கள் 22ஆம் நாள் (05-02-1995) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 6-35 மணி முதல் 7-00மணி வரையுள்ள
★ மகரலக்தின சுபமுகூர்த்த வேளையில் ★

| | |
|---|---|
| எனது ஏகபுத்திரன் திருவளர் செல்வன் **ஸ்ரீதரன்** அவர்களுக்கும் | எமது ஏகபுத்திரி திருவளர் செல்வி **கலைவாணி** அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு மணமகளில்லத்தில் மங்கலநாண் பூட்டப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம், தாங்களும் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம்
★ அன்புடன் அழைக்கின்றோம். ★

தங்கள் நல்வரவை விரும்பி நிற்கும்;

திருமதி த. கந்தசாமி
அவர்களுடன்
திரு. திருமதி பா. தவக்குமார்,
" செ. ஆறுமுகசாமி,
" செ. நவரத்தினசாமி,
" செ. மகாலிங்கம்,
" செ. சோதிலிங்கம்,
''நவபவனம்'',
கரம்பைக்குறிச்சி,
வரணி.

திரு. திருமதி செ. திருநாவுக்கரசு
அவர்களுடன்
திரு. திருமதி தி. திருச்செல்வம் [டென்மார்க்],
செல்வன் தி. முரளிதரன்,
செல்வன் தி. ரமேஸ் [சுவிஸ்],
''திருப்பதி'',
36, சேர். பொன். இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

[34979]

---

வெளிவந்துவிட்டது!

புதுவருட
## திருக்கணித பஞ்சாங்கம்
யுவ ஞு (1995 - 96)

''புதுவருடத்தில் உங்கள் திருமண மற்றும் நாள் கருமங்களை முன்கூட்டியே திட்டமிட்டு வைத்துக் கொள்ள
இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

**விலை ரூபா 60/- மட்டுமே**

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

[35007]

---

## மோட்டார் வாகன சாரதி பரீட்சகருக்கான பணிநிலை
# வெற்றிடம்

மோட்டார் வாகன சாரதிப் பரீட்சகர் பணிநிலை வெற்றிடத்தை நிரப்புவதற்கு தமிழீழ பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது ஆறு பாடங்களில் சித்தியெய்தியவர்களும், மோட்டார் வாகனச் சாரதிப் பரீட்சகர் பணிநிலையில் ஏற்கனவே சிறந்த பட்டறிவுடையவர்களும் [அனுபவம்], சிறந்த தேகாரோக்கியம் உடையவர்களும் தங்களுடைய கல்வி, பட்டறிவு, குணநலச் சான்றிதழ்களுடன் அலுவலக நேரங்களில் தமிழீழ நிர்வாக சேவை செயலகத்திற்கு நேர்காணலுக்காக சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (ஊதியம் நேர்காணலின் போது பேசித் தீர்மானிக்கப்படும்).

பொறுப்பாளர்,
**தமிழீழ நிர்வாக சேவை,**
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்,
தமிழீழம்.

(சி-495)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்

O/L
EVENING CLASSES [4-00 TO 6-00]
SAT-SUNDAY CLASSES [8 00 TO 2-00]
DAY CLASSES [8 00 TO 2-00]

**புதிய பிரிவுகள் ஆரம்பம்: 05 - 02 - 1995**

விஞ்ஞானம்: திரு. J. R. சூரி
சமூகக்கல்வி: திரு. கோபி
ஆங்கிலம்: திரு. விஸ்வநாதன்
சமயம்: திரு. சங்கர், கெங்கா
கணிதம்: திரு. தயாளன்
தமிழ்: திரு. திருப்பதி
திரு பிரதீபன்
வர்த்தகம்: திரு. கருணாகரன்

[சி-468]

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 01 - 02 - 1907
உதிர்வு: 05 - 1 - 1995

## அமரர் முத்து ஐயாத்துரை

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை பண்போடும் அறிவோடும் பாசத்தோடும் வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

''மனோகரி வாசா'',
மட்டுவில் தெற்கு.

[35018]

---

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 21 - 10 - 1960
இறப்பு: 21 - 01 - 1991

## நடராஜா ரஞ்சிற் கணேசகுமார்
(கலால் பரிசோதகர் (Excise Inspector)

திதி: 04 — 02 — 1995

கண்ணாக நீங்கள் இருந்து
கணவனாகப் பணிபுரிந்தீர்கள்
ஆண்டு நான்கு முடிந்ததையா
நீங்கள் என்னைப் பிரிந்து இன்று
ஆனாலும் என் இதயம் ஓயவில்லை
உங்கள் அன்பை எண்ணி இன்றும்
நல்லூர் கந்தன் அருளாலே
உங்கள் ஆத்மா சாந்தி பெறட்டும்.

மனைவி - மாலா,
அப்பா, அம்மா.

தங்கஸ்தான்,
கோப்பாய்.

(35017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
202/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## பாராட்டு பயன்தராது

அரசாங்கமும்தமிழீழ விடுதலைப்புலிகளும் போர் இடைநிறுத்த ஒப்பந்தம் செய்துள்ளதை ஐரோப்பிய சமூகம் வரவேற்றுள்ளது; பாராட்டியும் உள்ளது. மக்களின் நிலையை முன்னேற்றுவதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு ஐரோப்பிய சமூகம் தனது ஆதரவையும் தெரிவித்திருக்கிறது.

இப்போது கிடைத்திருக்கும் சந்தர்ப்பம், வாய்ப்பு, கிடைத்தற்கரியது. விதி விலக்காக அமைந்தது. அதனைத் தக்கவாறு பயன்படுத்தி இயன்றளவு விரைவில் நல்ல விளைவுகளைக் கொண்டு வரவேண்டும் — என்றும் ஐரோப்பிய சமூகம் கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை விடுத்த விசேட அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பொருளாதார புனர் நிர்மாணத்துக்கு சர்வதேச நிறுவனங்களுடனும், ஏனைய சாராருடனும் சேர்ந்து உழைப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் ஐரோப்பிய சமூக நாடுகள் தெரிவித்திருக்கின்றன.

போர் இடைநிறுத்த ஒப்பந்தம் என்ற முக்கிய முன்னேற்றம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு வழி செய்யும் எனவும் அவை நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

இப்போது செய்து கொள்ளப்பட்டுள்ள போர் இடைநிறுத்தம், பிரச்சினைக்குத் தீர்வு கண்டு அமைதியை உருவாக்குவதற்கான ஆரம்பப் படியாக அமைய வேண்டும் என்பதே இலங்கை மக்களில் பெரும்பான்மையானோரின் விருப்பமும் ஆசையுமாகும்.

இப்போதைய அமைதிச் சூழ்நிலை நிரந்தர அமைதிக்கும், வளமான வாழ்க்கைக்கும், இட்டுச் செல்ல வேண்டும் என்பதில் வெளியாரை விட இந்நாட்டு மக்களே அதிக அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், போருக்கு முடிவு கட்டுவதற்கும், சமாதானத்தை உருவாக்குவதற்கும் இது போன்ற அரிய சந்தர்ப்பம் இனிமேல் கிடைக்காது என்பதனையும் மக்கள் முற்றாகவும், தெளிவாகவும் உணர்ந்துள்ளனர். அதனாலேயே அரசாங்கம் இது விடயத்தில் மந்தகதியில் ஊர்வது கண்டு அவர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, நிரந்தர அமைதியையும், சமாதானத்தையும் உருவாக்கும் தனது இலக்கை அடைய உழைப்பதில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்று அரச தரப்பில் இருந்தும் உறுதி மொழிகள் வந்தாலும் —

செயலளவில், நடைமுறையில் மிக மெதுவான நகர்வையே காண முடிகிறது.

எனவே, ஐரோப்பிய சமூகம் போன்ற செல்வாக்குள்ள அமைப்புகள் வெறுமனே பாராட்டுவதுடனும், வரவேற்பதுடனும் நின்றுவிடாமல், அரசாங்கத்தை ஆக்கபூர்வமாகச் செயற்படத் தூண்ட வேண்டும். உரிய முறையில் நிர்ப்பந்திக்க வேண்டும்.

ஐரோப்பிய நாடுகள் பலவும் இலங்கையில் போர் முடிவுக்கு வர வேண்டும்; அமைதி திரும்ப வேண்டும் என்பதில் அக்கறையாக இருப்பதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

தமது நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கையரை திருப்பி அனுப்புவதில் உள்ள தீவிரமே இங்கு அமைதி பிறக்க வேண்டும் என்பதில் உள்ள அக்கறையாக மாறியுள்ளது.

பரவாயில்லை; அந்த அக்கறையை முன்வைத்தாவது இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு காண்பதற்கு இலங்கை அரசை வழிக்குக் கொண்டு வந்துவிட்டால் பெரிய கெட்டித்தனமாக அமையும்!

எனவே ஐரோப்பிய சமூகம் போன்ற வெளியார் சக்திகள் ஸ்ரீலங்கா அரசாங்கத்தை பின்பற்றி அதன் பாணியில் வெறும் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்காமல்; உள்ளே ஊடறுத்துச் செயலில் இறங்க வேண்டும். அதுவே இலங்கை மக்களுக்குச் செய்யும் பெரும் உதவியாக அமையும் அவர்கள் செய்யக்கூடிய நிதி உதவிகளை விடப் பெறுமதி மிக்கவையாக இருக்கும்.

# அமெரிக்க தூதரக அதிகாரிகள் திங்களன்று வவுனியா விஜயம்

## நிலைமையை நேரில் பார்த்தனர்

கொழும்பு, பெப். 4

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகள் கடந்த திங்களன்று வவுனியாவுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானித்துச் சென்றுள்ளனர்.

தூதரகத்தின் முதலாவது அரசியல் பிரிவுச் செயலாளர், பிரதேச பாதுகாப்பு அதிகாரி ஆகிய இருவருமே அங்கு விஜயம் செய்தனர்.

வவுனியாவில் பாதுகாப்புத் துறை அதிகாரிகளையும், இராணுவ இணைப்பதிகாரியையும் அவர்கள் சந்தித்து உரையாடினர்.

தாண்டிக்குளம் தடை முகாம் சோதனை நிலையம் என்பவற்றையும் பார்வையிட்டனர்.

பொதுமக்கள் தொடர்பாக அங்கு மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடைமுறைகள், அவர்களுடனான படையினரின் அணுகு முறைகள் குறித்து திருப்தி தெரிவித்த அதிகாரிகள், —

பாப்பரசரைச் சந்திப்பதற்காக வட பகுதியிலிருந்து வந்த கத்தோலிக்க யாத்திரிகர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த விசேட பாதுகாப்பு இலகு நடைமுறைகள் குறித்து மகிழ்ச்சி தெரிவித்தனர் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இதே வேளை —

நோர்வே தூதரகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்றும் விரைவில் வவுனியாவுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் அவதானிக்கவுள்ளது. (ஐ-14)

# யாழ். அரசசார்பற்ற அமைப்புகளுக்கு வெளிநாட்டு மனிதவள உதவி

## பெற்றுக் கொடுக்க ஆஸி. நிபுணர்கள் முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ். மாவட்டத்தில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொண்டு வரும் திட்டங்களுக்கு வெளிநாட்டு மனிதவள உதவிகளைப் பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

யாழ். வந்த ஆஸ்திரேலிய நாட்டு ''வொலண்டியர்ஸ் எபிரோட்டின் வெளிநாட்டு சேவை அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவங்களின் இணையப் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் இது பற்றி ஆராயப்பட்டது.

இதன்படி யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்டுவரும் திட்டங்களுக்கு தேவையான மனிதவள உதவிகளை வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொடுக்க ஆஸ்திரேலிய நாட்டு பிரதிநிதிகள் முன்வந்துள்ளனர்.

இது தவிர அரச சார்பற்ற நிறுவனங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ள உள்ள திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வெளிநாடுகளிலிருந்து பெறுவதற்கும் இந்நிறுவனம் சிபார்சு செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## பொலீஸ் அதிகாரி இடைநிறுத்தம்

கொழும்பு, பெப். 4

கிழக்கு மாகாணத்தில் கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது சட்ட விரோதமாகச் செயற்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ் நேற்று முன்தினம் முதல் பதவியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார். (ஐ—6)

## தமிழறிஞர் சரித்திரம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 4

வட்டுக்கோட்டை தொகுதி தமிழ்ச் சங்கத்தினரால் 'தமிழறிஞர் சரித்திரம்' என்னும் நூல் இன்று பிற்பகல் 2 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் வெளியிடப்படும்.

சங்கத் தலைவர் பண்டிதர் அ. ஆறுமுகம் தலைமையில் வெளியீட்டு விழா நடைபெறும்.

வெளியீட்டுரையை பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் நிகழ்த்துவார். அன்பளிப்புப் பிரதியையும் அவர் பெற்றுக் கொள்வார்.

# பாடசாலை மாணவருக்கு வறுமை நிவாரண முத்திரை

## உடன் பதியுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 4

1990 ஆம் ஆண்டு பிறந்து பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களுக்கும் வறுமை நிவாரண முத்திரைகள் வழக்கப்படவிருக்கின்றன.

90 ஆம் ஆண்டு பிறந்து இவ்வாண்டு பாடசாலையில் அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கு மேலதிக உணவு முத்திரை வழங்கப்பட விருப்பதாகவும்—

இந்த முத்திரை பெற தகுதியானவர்கள் தமது கிராம சேவையாளர்களுடன் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறும்— வறுமை நிவாரண உதவி ஆணையாளர் திருமதி விஜயலட்சுமி கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (ஓ-3)

# பல்கலைக்கழகம் மூடப்பட்டதற்கு அரசியல் சக்தி ஒன்றே காரணம்

## மாணவர் சங்கம் கண்டனம்

கொழும்பு, பெப். 4

''ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களுக்கும்,ஊர்வாசிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் எதுவும் இல்லை. அரசியல் சக்தி ஒன்றே அசம்பாவித சம்பவங்களுக்கு பின்னணியில் உள்ளது ''

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் சங்கம் முன் கண்டவாறு குற்றஞ் சாட்டியுள்ளது.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடந்த அசம்பாவித சம்பவத்தை தொடர்ந்து அது காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது தெரிந்ததே.

அண்மையில் நடந்த அசம்பாவிதத்துக்கு மாணவர்களுக்கும், ஊர்வாசிகளுக்கும்இடையில் ஏற்பட்ட முரண்பாடே காரணம் எனக் கூறப்படுவதை ஏற்கமுடியாது என்றும்—

சில மாணவர்களும், சில வெளிச்சக்திகளுமே அதற்குக் காரணமாகும் என்றும்—

இதுபற்றி விசாரிப்பதுடன் உடன் பல்கலைக்கழகத்தை திறக்க நடவடிக்கை எடுக்குமாறும் மாணவர் சங்கம் கோரியுள்ளது. (ஐ-3)

# மலையக பகுதியில் மீண்டும் பயங்கரவாதப் பிரசாரம்

மலையகத்தில் சிறிது காலம் மௌனமாகியிருந்த பயங்கரவாதப் பிரசாரம் மீண்டும் திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இதன் உடனடி விளைவாக கடந்த இரண்டு மாதங்களாக மலையக நகரங்களான ஹட்டன், டிக்கோயா பகுதித் தோட்டங்களைச் சேர்ந்த ஒரு டசனுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பயங்கரவாத மூலாம் பூசப்பட்டு இரவோடிரவாகக் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

1989/90 ஆம் ஆண்டுகளில் ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் (தோட்டப்பகுதி) இளைஞர்கள் காணமல் போய்விட்டார்கள்.

ஆண்டுகள் பல கடந்தும் இவர்கள் பற்றிய எவ்வித விவரங்களையும் பெறமுடியாதவர்களாக இவ்விளைஞர்களின் பெற்றோர் உள்ளனர்.

மனித உரிமைகள் பற்றியும் அரசியல் அத்துமீறல் பற்றியும் வாய் கிழியப்பிதற்றும் அரசியலாளரும் சரி, மனிதஉரிமையாளர்களும் சரி இந்த இளைஞர் விடயத்தில் எவ்வித மூச்சும் விட்டதாகத் தெரியவில்லை.

நவம்பர் மாத ஆரம்பத்தில் எட்டு மலையக இளைஞர்கள் ஹட்டன் பகுதித் தோட்டங்களில் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டார்கள்.

இவர்களிடம் துப்பாக்கிகள் வெடிகுண்டுகள் இருந்ததாகவும் —

இவர்கள் ''மலையக விடுதலை முன்னணி'' என்ற பெயரில் விடுதலைப்புலிகளின் துணைப்படையாக உருவாக்கப்பட்ட ஒரு இயக்கம் எனவும் 16-11-1994 வெளிவந்த 'லங்காதீப' பத்திரிகை முன் பக்கத்தில் செய்தி வெளியிட்டு பிரசாரப்படுத்தியுள்ளது.

15-11-1994 'ஐலண்ட்' பத்திரிகையும் தன் முன் பக்கச் செய்தியாக 'மலையகத்தில் புதிய பயங்கரவாதக் குழு'' எனத் தலைப்பிட்டு புலிகளின் வழிகாட்டலுடன் மலையக தோட்டப்பகுதியை தனிநாடாக்குவதற்கு இக் குழு முயன்றது'' என பிரசாரப்படுத்தியுள்ளது.

இது இவ்வாறிருக்க 'டெய்லி நியூஸ்' பத்திரிகையின் வாராந்த இதழான 'சண்டே ஒப்சேவர்' 20-11-1994இல் பாதுகாப்பு அறிக்கை என்ற தலைப்பில் 'மலையகம் புலிகளின் இன்னொரு முன்னணியாக மாறுமா?' என வினவியுள்ளதுடன் செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி பொகவந்தலாவ லெட்சுமி தோட்ட வேலை நிறுத்தத்தையும் அதிகாரிகளை தடுத்து வைத்ததையும் வெலிஓயா தோட்ட வேலை நிறுத்தத்தையும் தொடர்புபடுத்தி இவ்வாறான அதிகாரிகளை தடுத்து வைக்கும் நடவடிக்கைக்கு பயங்கரவாதப் பின்னணி இருப்பதாகக் காட்ட முற்பட்டுள்ளது.

இவற்றுக்கு வக்காலத்து வாங்குவது போல லங்கா தோட்ட தொழிலாளர் யூனியன் பிரமுகரான முகைதீனும் தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் ஐயாத்துரையும் அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர்.

திருவாளர் ஐயாத்துரை தமது அறிக்கையில் ''தோட்ட அதிகாரிகளை அடைத்து வைத்து தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொழிற்சங்க [illegible] குறிப்பிட்டு விசமிகள் தான் [illegible] குறிப்பிடுகிறார்.

இப்போது மலையகத்தில் நடக்கின்ற பயங்கரவாதப் பூச்சாண்டி பற்றி எந்த மலையக அரசியல்வாதியும் கண்டிக்கவில்லை. அல்லது கண்டு கொள்ளவே இல்லை.

பல ஆண்டு சிறை வாசம் செய்து வெந்தணல் தாண்டி வந்தவர்கள் கூட மௌனமாய் இருப்பதானது மலையகத்தில் சிந்திக்க கூடிய படித்த முற்போக்கு எண்ணம் கொண்ட தலைமுறையை அழித்துவிட துணைபோகும் செயல் என்பதில் சந்தேகமில்லை.

ஹேமியோபதி வைத்தியரான சந்தகுமார் உட்பட பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு வருவதானது மலையக இளைஞர் மத்தியில் பதற்றத்தையும், பீதியையும் அதிகரிக்கச் செய்துள்ளது.

திடீர். திடீரென இரவில் சிவிலுடையில் வருவோர் கண்களைக் கட்டி இளைஞர்களை காவிச் செல்வது நல்ல சகுனமல்ல.

இந்நிலையில், கடந்த காலங்களில் கைது செய்யப்பட்ட எந்த மலையக இளைஞராவது பயங்கரவாதி என நிரூபிக்கப்படவில்லை [இ]

நன்றி!
சரிநிகர்

## சிப்பாய் வீட்டில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, பெப். 4

சட்ட விரோதமான முறையில் தனது வீட்டில் ஆயுதங்களை வைத்திருந்த முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரை ரோந்து சென்ற மெதிரிகிரிய பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இவர் இரண்டு வருடங்களுக்கு முன்னர் இராணுவ முகாமிலிருந்து தப்பியோடியவர் என்றும் —

மூன்று ரக துப்பாக்கிகளை இவர் தமது வீட்டில் மறைத்து வைத்திருந்ததாகவும் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-14)

## தறியில் சிக்கி இளம் பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 4

ஓடிக் கொண்டிருந்த மின் தறியில் தலைமயிர் சிக்குண்டு ஏற்பட்ட விபத்தில் இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

திருநெல்வேலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மின்தறிவேலையில் ஈடுபட்டிருந்தவரான சுப்பிரமணியம் சுமதி (வயது-19) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் வேலணையில் இருந்து இடம் பெயர்ந்து திருநெல்வேலியில் வசித்துவருபவர் ஆவார். படுகாயமடைந்தஇவர்யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஓ-15)

## சோதிடர் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், பெப். 4

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் ஆய்வரங்கும் பயிலரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும்.

ஆய்வரங்கில் ப. கனகலிங்கம், பி. இரத்தினசேகர் ஆகியோரின் ஆய்வுரைகள் இடம் பெறும். இதனைத் தொடர்ந்து புதிய மாணவர்களுக்கான சோதிட வகுப்புகள் ஆரம்பித்து வைக்கப்படும். (ஐ-14)

## உபாலியின் மனைவி மறுமணம்

கொழும்பு, பெப். 4

உபாலி விஜேவர்த்தனாவின் மனைவி லக்மினி விஜேவர்த்தனா பிரபல வர்த்தகரான நிமால் வெல்கமவை மறுமணம் செய்து கொண்டார்.

உபாலி பத்திரிகை நிறுவன உரிமையாளரான உபாலி விஜேவர்த்தனா 13 வருடங்களுக்கு முன்னர் விமானத்தில் பயணம் செய்த சமயம் காணாமற் போனது தெரிந்ததே.

அவரது மறைவுக்குப் பின்னர் லக்மினி விஜேவர்த்தனாவே உபாலி பத்திரிகை நிறுவனத்தின் தலைவராக இருந்து வருகிறார்.

லக்மினி—வெல்கம திருமணம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு தேர்ஸ்ரன் வீதியில் உள்ள லக்மினியின் வீட்டில் நடைபெற்றது.

# சுவாமி பிரேமானந்தா மீது குற்றப் பத்திரிகை தாக்கல்

புதுக்கோட்டை, பெப். 4

ஆட்களை சட்டவிரோதமாக தடுத்து வைத்திருந்தமை மற்றும் கற்பழிப்பு கொலைக் குற்றச்சாட்டுகளின் பேரில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சுவாமி பிரேமானந்தா மீதும் மற்றும் ஏழுபேர் மீதும் கிரனூர் மாஜிஸ்திரேட் வி. முரளிசுந்தரம் முன்னிலையில் குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சுவாமி பிரேமானந்தாவே வழக்கில் முதல் எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். அவருடன் திவ்வியாதேவி, கமலானந்தா, டாக்டர் சந்திராதேவி, பாலேந்திரன், மயில்வாகனன், நந்தகுமார், சதீஸ்குமார் ஆகியோர் மீதும் குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்கில் 94 பேர் சாட்சிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ஐ)

## மட்டக்களப்பு பிரதேசத்தில்

# நெல் அறுவடைக்கு டீஸல் வழங்க கட்டுப்பாடுகள்

மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிலையங்களில் பாவனையாளர்களுக்கு 15 லீற்றருக்கு மேல் எரிபொருளை வழங்க மறுப்புத் தெரிவிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

இப்பிரதேசங்களில் நெல் அறுவடை நடைபெற்று வருவதால் அதிகளவு டீசல் தேவைப்படுவதாகவும், 15 லீற்றருக்கு மேல் எரிபொருள் மறுக்கப்படுவதால் வேளாண்மை அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை அறுவடை செய்யப்பட்ட நெல்லை சோதனை நிலையங்களில் சோதனைக்காக படையினர் முன்பாக கொட்டிக்காட்ட வேண்டியிருப்பதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-14)

## பெருந்தொகை சிகரெட் பறிமுதல்

கொழும்பு, பெப். 4

நாட்டுக்குள் சட்ட விரோதமாகக் கடத்திவரப்பட்ட சுமார் 21 லட்சம் சிகரெட்டுகளை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சுங்க அதிகாரிகளால் இவ்வளவு பெருந்தொகையான சிகரெட் கைப்பற்றப்பட்டிருப்பது இதுவே முதல் முறை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகள் அரசுடமையாக்கப்பட்டன. (ஐ-6)

## ஆசிரியர் கல்வியியல் தொழிற் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.4

கல்விக் கல்லூரிகளில் ஆசிரிய கல்வியியல் தொழிற் பயிற்சி நெறியினை தொடர்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி அனுமதி தொடர்பான விவரங்களடங்கிய 13-01-1995ஆம்திகதியவர்த்தமானி கல்வித்திணைக்களம் - வலயம்—1 இல் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

விண்ண்பங்கள் இம்மாதம் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பங்களை இம்மாதம் 6 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்பாக கல்வித் திணைக்களம்வலயம்-1 இலும் நேரடியாக கையளிக்கலாம்.

6 ஆம் திகதிக்குப் பின்னர் நேரடியாக கையளிக்கப்படும் விண்ணப்பங்களும் கல்வித் திணைக்களம் வலயம்—1 க்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது (இ-14)

## குடியிருப்பு திறப்பு

தென்மராட்சி, பெப் 4

தமிழர் புனர்வாழ்வுக் கழக பளைப் பிரிவினரால் முகமாலை பொந்தர் குடியிருப்பில் அமைக்கப்பட்ட 'கணபதிப்பிள்ளை குடியிருப்பு' கடந்த 25 ஆம் திகதி தமிழர் புனர்வாழ்வுக் கழக செயலாளர் இலங்கேசால் திறந்து வைக்கப்பட்டது

இவ்விழாவில் குடியிருப்பின் பெயர்ப் பலகையை தமிழர் புனர்வாழ்வுக் கழக தமிழீழப் பொறுப்பாளர் சி. இரவி திரைநீக்கம் செய்து வைத்து இக் குடியிருப்பில் உள்ள குடும்பங்களுக்கு சமையல் பொருட்களையும், சமையலுக்குத் தேவையான பாத்திரங்களையும் வழங்கினார்

இக் குடியிருப்பில் இயக்கச்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 18 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன (க-117)

## அழைப்பிதழ் தமிழில் இல்லை

கொழும்பு, பெப் 4

ஜனவரி 24 ஆம் திகதி நடைபெற்ற சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு அகடமியின் பட்டமளிப்பு விழாவுக்கான அழைப்பிதழ்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே அச்சடிக்கப்பட்டிருந்தன.

அழைப்பிதழைத் தமிழில் அச்சடிக்காமல் விட்டது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உகந்தது அல்ல என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். (க)

## கென்னத் பங்குபற்றும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப். 4

அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயர் அதி. வண கெனத் பெர்னான்டோவின் யாழ். விஜயத்தை ஒட்டிய சிறப்புக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு சுண்டிக்குளி சோமசுந்தரம் அவென்யூவில் அமைந்துள்ள இறை மக்கள் பயிற்சி நிலையத்தில் இதன் பணிப்பாளர் அருட்திரு கலாநிதி ஹென்றி விக்டர் தலைமையில் நடைபெறும்.

இதில் முதன்மை விருந்தினராக ஆயர் அதி.வண கெனத் பெர்னான்டோ கலந்து கொள்வார். ''திருச்சபையில் பொது நிலையினருடைய அந்தஸ்தும் தொழிற்பாடும்'' என்னும் தலைப்பில் அருட்திரு. ஜே. சர்வானந்தம் உரையாற்றுவார். (ஐ-7)

## நயினா மரிக்கார் காலமானார்

கொழும்பு. பெப். 4

முன்னாள் நிதியமைச்சர் என். எச். எம். நயினா மரிக்கார் நேற்று கொழும்பில் காலமானார். அவருக்கு வயது 78. (இ-14)

## வெங்காயம் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ் மாவட்டத்தில் வெங்காய அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அளவெட்டி, ஊரெழு உரும்பிராய் போன்ற பகுதிகளில் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

வெங்காயம் அறுவடை செய்யப்படுவதை அடுத்து சந்தைகளில் வெங்காயம் ஒரு கிலோவின் விலை 15 ரூபாவாகியுள்ளது. (க-17)

## கரட்,போஞ்சி அமோக விளைச்சல்

யாழ்ப்பாணம், பெப் 4

குடாநாட்டில் கரட் போஞ்சி, லீக்ஸ் ஆகியவற்றில் இம்முறை அமோக விளைச்சல் கிடைத்துள்ளதாக யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு க சிவலோகநாதன் தெரிவித்தார்

அளவெட்டி ஊரெழு உரும்பிராய், கோப்பாய் போன்ற பகுதிகளிலேயே விவசாயிகள் இவற்றைக் கூடுதலாகப் பயிரிட்டுள்ளனர். (க-17)

## இலவசமாக தென்னங்கன்று

யாழ்ப்பாணம். பெப். 4

யாழ். பிரதேச செயலகம் இலவசமாக தென்னங் கன்றுகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது

கிராம சேவையாளர் ஊடாக குறிக்கப்பட்ட சில மக்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்படும் என்று பிரதேச செயலர் க குணராசா தெரிவித்தார். (இ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 ஆவது
# பிறந்ததின வாழ்த்து

★ கார்த்தி கதிர்காமநாதன் ★

கைதடிச் சந்தியை வசிப்பிடமாகக் கொண்ட கார்த்தி தம்பதிகளின் புதல்வன் கதிர்காமநாதன் அவர்கள் தனது 27 ஆவது பிறந்தநாளை இன்று 04 – 02 – 1995 சனிக்கிழமை சுவிற்ஸர்லாந்தில் தனது நண்பர்களுடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அவரை அப்பா, அம்மா, இராசாத்தி அக்கா, ஸ்ரீஸ்கந்தராசா அண்ணா, தங்கராணி அண்ணி, சித்தப்பாமார், சித்திமார்கள், மாமாமார் டென்மார்க்கில் வசிக்கும் இராஜேந்திரம் அத்தான், ஆகியோர். சிரும் சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் சுதந்திரமாக வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

(34904)

# IN LOVING MEMORY OF



**ALICE MUTHUMANEY ARIARATNAM**

BORN: 15 — 05 — 1916
CALLED TO GLORY: 04 — 02 — 1994

Fondly Remembered by her
HUSBAND and LOVED ONES

"Melita"
707, Hospital Road,
Jaffna.

[C-450]

# தவறிவிட்டது

நல்லூர் ஆலய சுற்றாடலில் ஒரு கைச் சங்கிலி தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் இவ் விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த. சன்மானம் வழங்கப்படும்.

சி. மகேந்திரன்.
230. நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

[35032]

## யாழ்ப்பாணக் கல்லூரி
## பட்டதாரிப் பிரிவு

464. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

### க. பொ. த. உயர்தரம் ஆகஸ்ட் - 95
## மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்

04 - 02 - 1995 சனிக்கிழமை காலை 9 மணிக்கு அங்குரார்ப்பண நிகழ்வுடன் ஆரம்பமாகும் விண்ணப்பித்தவர்களும், இன்னும் சேர விரும்புகிறவர்களும் கட்டணங்களைச் செலுத்தி அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும். அன்றைய தினம் நேரசூசி [Time Table] தரப்படும். வகுப்புக்கள் கிழமை நாட்களில் காலை 8.45 மணி முதல் பிற்பகல் 1.15 மணி வரை நடைபெறும்.

**நான்கு பாடங்களுக்கு மாதக் கட்டணம் 200/-**

பாடங்கள்:

தாவரவியல், விலங்கியல்,
பௌதிகவியல், தூய, பிரயோக கணிதம்
இரசாயனவியல்

குறிப்பு: எங்கள் ஆசிரியர் குழுவின் பெயர்களையும் விவரங்களையும் 1 - 1 - 95 உதயன் கடைசிப் பக்கத்தில் பார்க்கலாம்.

இயக்குநர்.

(சி/350)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில் பகுதித்தலைவராக கடமையாற்றும்
ஆசிரியை திருமதி சு. விவேகானந்தனின்
தந்தையார்

## தம்பர் சேனாதிராசா

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்

யா/ இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

(5776)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 04 - 02 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## ஆலயங்களில்

நயினாதீவு இரட்டங்காலி ஸ்ரீ முருகமூர்த்தி ஆலயத் திருக்குடமுழுக்கு விழா நயினாதீவில் நாளை நடைபெறுகிறது. அந்த நிகழ்வையொட்டி நல்லூர் சிவன் கோவிலில் உள்ள முருகன் ஆலயத்தில் நாளை காலை 7 மணிக்கு விசேட அபிசேகம் நடைபெறவுள்ளது. (அ)

★ ★ ★

கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவசுவாமி கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் 108 சங்காபிஷேகத்துடன் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்களுக்கு நடைபெறும்.

உற்சவ காலங்களில் தினமும் யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் தமிழருவி த. சிவகுமார் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவை நிகழ்த்துவார் (க-7)

★ ★ ★

யாழ். இந்து மகளிர் கல்லூரி நடுத் தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் ஆலய உற்சவ மூர்த்திப் பிள்ளையார் நூதனப்பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது (ஐ)

★ ★ ★

தெல்லிப்பழை, பெப். 4

கோப்பாய் அருள்மிகு வெள்ளெருக்குப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் நாளை காலை 6 மணி முதல் ஏககால லட்சார்ச்சனை நடைபெறவிருக்கிறது

காலை விசேட அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகும் லட்சார்ச்சனை முடிவில் விநாயகர் வீதி உலாவருவார். (இ-68)

## இன்று

தென்மராட்சி, பெப். 4

தென்மராட்சி கல்விக்கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சுவாமி விவேகானந்தர் பேச்சுப் போட்டிகள் இன்று சனிகாலை 8. 30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும். [இ-117]

★ ★ ★

விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டு நிறுவனத்தினால் பளை இத்தாவிலில் அமைக்கப்பட்ட பாலர் பாடசாலை இன்று சனி காலை 8-30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (இ-117]

## நாளை

யாழ்ப்பாணம், பெப். 4

பண்டிதர் க. சச்சிதானந்தன் "இயங்கு தமிழ்" என்ற பொருளில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் உரை நிகழ்த்துவார். (இ-17)

## இனப்பிரச்சினைக்கு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னார்.

இனப்பிரச்சினை தீர்வு முயற்சிக்கு அமெரிக்கா அளிக்கும் ஆதரவுக்கு அமைச்சர் கதிர்காமர் நன்றி கூறினார்.

அரசின் சமாதான முயற்சிக்கு அனைத்துலக சமுதாயத்தின் ஆதரவையும் இலங்கை அரசு எதிர்பார்த்திருப்பதாக அமைச்சர் கதிர்காமர் மேலும் தெரிவித்தார். (இ-3-6)

## 600க்கு மேற்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரும், துறைமுக கப்பல் போக்குவரத்து அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் நியமித்திருந்தார்.

இக்குழுவிற்கு இதுவரை 600 முறைப்பாடுகள் கிடைந்துள்ளதாகவும், அம்முறைப்பாடுகள் தொடர்பாக விரைவில் விசாரணை நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## ஜனாதிபதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மன்ட முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவுக்குத் தலைமை அதிகாரியாக இருந்த பிரதிப் பொலீஸ் மா அதிபர் காமினி குணவர்த்தனா அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். [அ]

## கென்னத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருட் பிதா. எஸ். பி. நேசகுமார் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பேராயரின் வழிபாட்டு நிகழ்ச்சிகள் இன்று முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை நடைபெறும்.

அதுவரை அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 94 – 95 பல்கலை: அனுமதி வெட்டுப்புள்ளி

| | மருத்துவம் | பல் மருத்துவ விஞ்ஞானம் | விலங்கு மரு. விஞ்ஞானம் | விவசாயம் | உயிரியல் | பொறியியல் — I | பொறியியல் — II | பௌதிக விஞ்ஞானம் | முகாமைத்துவம் | வர்த்தகம் | சட்டம் | கலை | கட்டடக் கலை | கணிய அளவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 291 | 289 | 285 | 275 | 272 | 28) | 283 | 246 | 288 | 269 | 285 | 253 | 233 | 281 |
| யாழ்ப்பாணம் | 284 | 283 | 282 | 274 | 267 | 290 | 284 | 249 | 282 | 269 | 269 | 253 | 208 | 281 |
| கிளிநொச்சி | 252 | 249 | 245 | 236 | 221 | 131 | 219 | 180 | 251 | 235 | 230 | 253 | — | 189 |
| மன்னார் | 255 | 246 | 243 | 228 | 218 | 231 | 220 | 180 | 257 | 247 | 259 | 253 | — | 211 |
| முல்லைத்தீவு | 143 | 241 | 222 | 221 | 217 | 266 | 254 | 296 | 250 | 138 | 165 | 253 | — | 247 |
| வவுனியா | 231 | 227 | 225 | 220 | 199 | 258 | 239 | 204 | 281 | 241 | 252 | 253 | — | 230 |
| திருமலை | 239 | 238 | 237 | 231 | 209 | 237 | 229 | 181 | 271 | 241 | 268 | 253 | — | 225 |
| மட்டக்களப்பு | 267 | 266 | 264 | 262 | 250 | 260 | 249 | 220 | 272 | 257 | 254 | 253 | — | 244 |
| அம்பாறை | 260 | 259 | 258 | 254 | 241 | 252 | 241 | 197 | 263 | 255 | 174 | 253 | — | 239 |

### ராஜீவ்காந்தி கொலைவழக்கு:
# பிரபாவை கைது செய்ய முடிய வில்லையாம்!
## இன்ரர்போல் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 4

"முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் அவ்வியக்கத்தின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானையும் கைது செய்ய முடியவில்லை."

இவ்வாறு சர்வதேச பொலீஸ் அமைப்பான இன்ரர்போலின் இந்தியக்கிளைக்கு அதன் இலங்கைக்கிளை அறிவித்திருக்கிறது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் யாழ்ப்பாணத்தில் பிரபாகரனும், பொட்டு அம்மானும் இருப்பதாலேயே அவர்களை கைது செய்து விசாரணை நடத்த முடியவில்லை என்று காரணமும் கூறப்பட்டுள்ளதாக கொழும்பு தமிழ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)

# மன்னார் மாவட்ட பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 4

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் நடத்தப்பட்ட தமிழீழ பொதுக்கல்வித் தேர்வில் மன்னார் மாவட்ட கல்விக் கோட்டங்களில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று தேசியத்தலைவரின் காசுப் பரிசுகளையும் —

பாராட்டு சான்றிதழ்களையும் —

பேரவையின் வெற்றிப்பதக்கங்களையும் — பெறும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று சனி பிற்பகல் 3 மணிக்கு மன்னார் மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் நிக்சன் தலைமையில் ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும்.

விழாவில் அரசியற் துறை துணைப்பொறுப்பாளர் திரு கரிகாலன் வணபிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார், பேராசிரியர் அ. சண்முகதாஸ், மன்னார் மாவட்டத் தளபதி உட்பட பலர் பங்குபற்றுவர்.

மன்னார் மாவட்டத்தில் பரிசில்கள் பெறுவோர் விவரம் வருமாறு:-

அ. ரெ. ஜோன்பிள்ளை (முருங்கன் ம.வி.), கொன்செஸ்ரா தயாநிதி மரியதாஸ் (முருங்கன் ம. வி.), கலைவாணி தில்லைநாதன் (காக்கையன்குளம் ம. வி), இதயகலா நாகசுந்தரம் (உயிலங்குளம் அ.த.க.பாடசாலை), டன்ஸிடவின்ரா ஞானப்பிரகாசம் (வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை) றோலிவெனிஸ்டா சத்தியாம்பிள்ளை (கருங்கண்டல் றோ. க.பாடசாலை) (இ-7)

# வீரவணக்கக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப். 4

சண்டிலிப்பாய் வட்டத்தில் பெப்ரவரி மாதத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர்கள் நினைவாக மாதாந்த மாவீரர் வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8 மணிக்கு சண்டிலிப்பாய் நந்நன் சனசமூக நிலைய முன்றிலில் சண்டிலிப்பாய் வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. அன்பழகன் தலைமையில் நடைபெறும். [இ-7]

★ ★ ★

தச்சன்காடு மினிமுகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த 36 மாவீரர்களின் நினைவு வீரவணக்கக் கூட்டம் நாளை ஞாயிறு இரவு 8 மணிக்கு கெருடாவில் 36 வீரவேங்கைகள் நினைவு பாலர் பாடசாலை முன்றிலில் தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. வெற்றிச்செல்வன் தலைமையில் நடைபெறும். [இ-7]

## ஹொரகொல்லவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் படத்தை எடுத்து—

தபாலில் அனுப்புவதாகக் கூறி அவர்களின் விலாசத்தைப் பெற்றுக் கொண்டார் என்றும்—

அவர்களுடன் கூடச்சென்று சமாதியையும் படம் எடுத்தார் என்றும் — தாம் நடத்திய விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாகவும் இரகசியப் பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டு இப்போது பொலீஸ் காவலில் உள்ள சந்தேக நபர் முன்னர் மாத்தளையில் வசித்து வந்தவர் என்றும்—

1983 இனக்கலவரத்தின் போது கிரிபத்கொடவில் உள்ள அவரது வீடு எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து கிளிநொச்சி சென்று அங்கு மறுமணம் செய்தார்— என்றும் விசாரணைகள் மூலம் மேலும் தெரியவந்ததாக இரகசியப் பொலீஸார் தெரிவித்துள்ளனராம்.

ஜீவரத்தினம் பொன்னையாவின் நண்பர்கள், உறவினர்கள் பதினைந்து பேர் இது வரை விசாரணை செய்யப்பட்டுள்ளனர்.

## உருளைக்கிழங்கு தாக்கும் நோய்

கொழும்பு, பெப்.3

தற்போது உருளைக்கிழங்குப் பயிரை பரவலாகத் தாக்கிவரும் சிற்றுண்ணியைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் விவசாயிகளுக்கு அறிவித்துள்ளனர்.

## பிரபா பிறந்த...

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சம்பந்தப்பட்ட ஹோட்டல் திறப்பு விழாவில் பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஒருவரும், அரசாங்க உயர் அதிகாரிகள் பலரும், கூட்டுத்தாபனம் ஒன்றின் முன்னாள் தலைவரின் மகனும் கலந்து கொண்டதாகவும் தகவல் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப ஹோட்டல் ஊடாக விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை கொழும்பில் விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளதா? என்பது குறித்தும் இரகசியப் பொலீஸார் விசாரிப்பார்களாம்! (அ)

# மரண அறிவித்தல்

## கனகரத்தினம் பாலசந்திரன்
### [துளசி]

[இளைப்பாறிய யாழ். பிரதேச மின் பொறியியலாளர் இலங்கை மின்சார சபை]

கலட்டியை பிறப்பிடமாகவும், 14/1, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும், தற்போது 84/5, Lauries Road Bamlalapitiya வில் வசித்து வந்தவருமாகிய கனகரத்தினம் பாலசந்திரன் 2-2-95 பிற்பகல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற இளையதம்பி [இளைப்பாறிய தபால் அதிபர்] சத்தியலெட்சுமி தம்பதிகளின் மருமகனும், நாகரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், பாலேந்திரன் (பொறியியலாளர்- Australia), சிவகௌரி [Australia], சசிலேகா (Australia) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காயத்ரி (Australia), சுதன்(பொறியியலாளர் Australia), அருணேஸ்வரன் (பொறியியலாளர் Austraļia) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
இ. சு[illegible]ணாகரன்
[மைத்துனர்]

14/1 அன்னசத்திர ஒழுங்கை
கந்தர்மடம்.

(35038)

## சின்னையா பஞ்சலிங்கம்

[முன்னைநாள் சுன்னாகம் ப. நோ. கூ. ச. கிளை 14 முகாமையாளர்]

இணுவில் மேற்கைச் சேர்ந்த சின்னையா பஞ்சலிங்கம் நேற்றுக் காலமானார். இவர் புனிதவதியின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரன் [பபா — கனடா], திருமதி விஜயகுமாரி [ஆசிரியை இணுவில் மத்திய கல்லூரி], செல்வி மாலினி [நடன ஆசிரியை — இணுவில் இந்துக் கல்லூரி], சியாமளா, சாளினி, தயந்தினி, ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயரூபனின் [ஆசிரியர் — யூனியன் கல்லூரி] அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை [04 – 02 – 1995] பி. ப. 2.00 மணிக்கு தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திரு. பாலச்சந்திரன் [செல்வம்]
[மைத்துனர்]

மல்றி ஒயில் இணுவில்.

[35039]

## ஐயாத்துரைக்குருக்கள் சோமசுந்தரஐயர்

(உரிமையாளர் – சக்தி நூல் நிலையம், மட்டக்களப்பு)

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த காலஞ்சென்ற ஐயாத்துரைக்குருக்கள் சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகன் சோமசுந்தரஐயர் 3 – 2 – 95 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார். இவர் பராசக்திஅம்மாவின் அன்புக்கணவரும், இராமலிங்கக்குருக்கள், இரத்தினக்குருக்கள், கந்ததாசசர்மா, பாலசுப்பிரமணியசர்மா, தியாகராசசர்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மட்டுநகர் சக்தி நூல் நிலையம், ஸ்ரீதரசர்மாவின் சிறியதகப்பனாரும், ஹட்டன் நாஷனல் வங்கி ஜெகதீஸ்வரன், கார்த்தியாயினியின் அன்பு மாமனாரும், நீர்வேலியைச் சேர்ந்த சாம்பசதாசிவக் குருக்கள், குகதாசசர்மா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 4 – 2 - 95 சனிக்கிழமை நண்பகல் அவரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. சாம்பசதாசிவக்குருக்கள்
(அரசகேசரிப் பிள்ளையார் கோவில்)

கிராம சபையடி,
நீர்வேலி.

(35040)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org